<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சிவசாமி | நாள் | 05.03.2025 |
| தகப்பனார் பெயர் | பரமசிவம் | | |

**<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) என்ன பரிகாரம் கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், எங்கள் நிலத்தில் தடவழி கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். லிங்குசாமி என்ன உறவு என்றால், அவர் என் பெரியப்பா. பரமசிவம் யார் என்றால், அவர் என் தந்தை. பச்சமுத்து யார் என்றால், என் பெரியப்பா மகன். என் பதிலுரையில் நான் சொல்லியுள்ள சிவசாமி என்பவர் யார் என்றால், அவர் என் மற்றொரு பெரியப்பா சோமசுந்தரம் என்பவரது மகன் ஆவார். கோவிந்தராஜ் யார் என்றால், அவர் என் உடன்பிறந்த சகோதரர். அவர் தற்போது இறந்துவிட்டார். ரஞ்சிதம் என்பவர் யார் என்றால், என் பெரியப்பா லிங்குசாமியின் பேத்தி ஆவார். பச்சமுத்துவின் மகள் ஆவார். சௌந்தர் என்பவர் யார் என்றால், மேற்படி பச்சமுத்துவின் மகன் ஆவார். பாஸ்கர் என்பவர் எனது மகன் ஆவார். பவித்ரா என்பவர் என் மகள் ஆவார்.

2) மேற்படி நபர்களும், நானும் சேர்ந்து 09.03.2000ம் வருடத்தில் வாதியின் தாயார் பொன்னிக்கு பள்ளிப்பட்டி கிராம ச.எண்.194ல் உள்ள 0.93–1/2 செண்ட் நிலத்தை கிரயம் கொடுத்துள்ளோம் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 கிரய ஆவணம் தான் மேற்படி நாங்கள் பொன்னிக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் மேற்படி 0.93–1/2 செண்ட் நிலத்திற்கு கூனாண்டியூர் ரோட்டிலிருந்து பரமசிவம் மற்றும் வாதியின் கணவர் சிவசாமி நிலங்களின் வழியாக தென்வடலாக செல்லும் மாமூல் தடவழி உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், அவ்வாறு ஒரு தடவழியே நிலையில் இல்லை.

3) மேற்படி பொன்னி எங்களிடம் 2000ம் வருத்தில் கிரயம் பெற்ற மேற்படி நிலத்தை தன் மகளான வாதிக்கு கடந்த 20.03.2013ம் தேதியில் தானசெட்டில்மெண்ட்

அளித்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆணத்திலும் 2000ம் வருட கிரய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அதே தடவழி குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், தடவழி எதுவும் நிலையில் இல்லை. தற்போது பிரச்சனைக்குரிய தடம் சுமார் 50 ஆண்டு காலமாக நிலையில் உள்ளது என்றால், சரியல்ல.

4) தாவா தடவழியை நாங்கள் தடுத்ததாக கூறி, வாதியின் தந்தை சிவசாமி எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால், ஒரு புகார் அளித்தார். மேற்படி புகாரின் அடிப்படையில் போலீசார் எங்களை அழைத்து விசாரித்து, உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு நாங்கள் தாவா தடவழியை கல்லையும், மண்ணையும் கொண்டு அடைத்து இடையூறு செய்ததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் தாவா தடவழியில் உள்ளது உள்ளவாறு இருக்கவேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால், நாங்கள் அவ்வாறு எந்த இடையூறும் செய்யவில்லை.

5) கூணாண்டியூர் ரோட்டிலிருந்து பரமசிவத்தின் பட்டா நிலத்தின் வழியாகவும், பின் வாதி தந்தையின் நிலத்தின் வழியாகவும், தடவழி வழியாக சென்று தான் தாவா சொத்திற்கு செல்ல இயலும் என்றால், சரியல்ல. அவ்வாறு ஒரு தடவழியே இல்லை.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.